# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................................

பகுதி –I

➢ **மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) மாணவர்களாகிய நாம் நல்ல பொழுதுபோக்காகவும் உடற்பயிற்சியாகவும் குடும்பப் போசணைத் தேவையை நிறைவு செய்துகொள்ளவும் பொருளாதார ரீதியான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளவும் இலகுவாக செய்து கொள்ளக் கூடிய செயற்பாடு,

1. வீட்டுத்தோட்டம் செய்தல்
2. சுற்றுலா செல்லல்
3. முத்திரை சேகரித்தல்
4. திரையரங்கு செல்லல்

2) இலங்கையில் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களில் மரக்கறிகள் பழவகைகள் எத்தனை சதவீதமானவை நுகரமுடியாது அகற்றப்படுகின்றன?

1. 15 – 20 %
2. 20 – 25 %
3. 25 – 35 %
4. 30 – 40 %

3) முன்மினுக்குப் பதார்த்தமாகக் குறிப்பிடக்கூடியது எது?

1. அரங்கு
2. வார்ணிஷ்
3. மரநற்காப்பி
4. எனாமல் பூச்சு

4)



மேலே படத்தில் காட்டப்பட்ட இலத்திரனியல் துணைக்கூறின் புறத்தோற்றத்தில் காட்டப்படுவது?

1. ஒளிகாலும் இருவாயி
2. மாறுந்தடையி
3. கொள்ளளவி
4. தடையி

5) நதிகளை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் நீர்தேங்கி நிற்பதனாலும் நதிகளின் வழமையான போக்கு தடைப்படுவதனாலும் உருவாவது எது?

1. கடனீரேரி
2. சதுப்பு நிலம்
3. ஆற்றுக்கழிமுகம்
4. தடாகம்

6) திரான்சிஸ்ரரில் மூன்று முனையில் ஓர் முனையில் B எனக் காணப்பட்டது. B குறித்த முனை எது?


1. சேகரிப்பான்
2. அடி
3. காலி
4. விளிம்பு

7) மூட்டுக்காலியாக குறிப்பிடமுடியாதது எது?

1. நண்டு
2. விரால் சுங்கான்
3. இறால்
4. சிங்கிஇறால்

8) நாம் சாதாரணமாக மரக்கறிகள், பழங்கள், சமைத்த உணவுகளைக் குளிரூட்டல் மூலம் சிலநாட்களுக்குப் பேணலாம். இங்கு குளிரூட்டல் என்பது,

1. $2^0$ C – $4^0$ C வரை
2. $4^0$ C – $8^0$ C வரை
3. $5^0$ C – $12^0$ C வரை
4. $0^0$ C – $5^0$ C வரை




9) A எனும் எழுத்தினால் குறித்துக்காட்டப்படுவது எது?
   1. குண்டுப்போதிகை
   2. புஷ்
   3. வாசர்
   4. கோப்பைநட்டு

10) செயற்பாட்டு அறையில் ஆரம்ப தொழினுட்ப செயற்பாடுகளில் ஈடுபட முன் நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது எது?
   1. மின்சாரம் உள்ளதா என
   2. உரிய ஆயுதம் உள்ளதா என
   3. பாதுகாப்பு
   4. ஆசிரியர் உள்ளாரா என

(10 * 1 = 10 புள்ளி)

**மிகப் பொருத்தமான சொற்களை இட்டு இடைவெளி நிரப்புக.**

11) மண்ணீர்க்காப்பிற்கு பொருத்தமான நீர்ப்பாசன முறையாக ……………………….. , ……………………………. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

12) நாம் பொதுவாகப் பயன்படுத்தும் சீராக்கும் இருவாயியாக ……………………………… குறிப்பிடமுடியும்.

13) நீர்முதல் சார்ந்த மருத்துவக்குணமுள்ள மூலிகைத் தாவரங்களாக ……………………. , ……………….. , ……………………….. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

14) உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நுகர்வோரின் கைகளுக்கு மாற்றப்படும் செயன்முறை ……………………………. என அழைக்கப்படும்.

15) தோடம்பழத்தோலை செறிவுள்ள சீனிக்கரைசலில் அமிழ்த்துவதனால் ……………………………. பெற்றுக்கொள்ள முடியும்.

(5 * 1 = 5 புள்ளி)

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

16) கொள்வனவாளர்களுக்கும் வழங்குநர்களுக்குமிடையே கொடுக்கல் வாங்கல் நடைபெறும் இடம் சந்தை எனப்படும். (…………………..)

17) பட்டர், எண்ணெய் போன்றவை பாண்டல் அடைவது பௌதீகக் காரணிகளினால் ஆகும். (………………….)

18) நாம் அமைக்கும் வீட்டுத்தோட்டம் எப்போதும் சூழல்நேயமாக அமைந்திருத்தல் நல்லது. (………………….)

19) மட்டக்களப்பு வாவிக்கு அருகாமையிலுள்ள சதுப்பு நிலம் நன்னீர் சதுப்பு நிலமாகும். (………………….)

20) சாதாரண துவிச்சக்கரவண்டியை மனிதவலுவினால் செயற்படும் ஒன்றாக குறிப்பிட முடியாது. (………………….)

(5 * 1 = 5 புள்ளி)


kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

1) தரம் 8 இல் செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள் பாடத்தில் செய்முறையாகவும், செயற்றிட்ட ரீதியாகவும் பல்வேறு செயற்பாடுகளில் மகிழ்வுடன் ஈடுபட்டோம்.
   1. நீங்கள் மேற்கொண்ட செயற்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.
   2. நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டுக்குத் தேவையான பொருட்கள், கருவிகள் உபகரணங்களை அட்டவணைப்படுத்துக.
   3. நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டினை படிமுறை ஒழுங்கில் தருக.
   4. செயற்பாட்டின்போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் எவை?
   5. செயற்பாடு வெற்றிகரமாகச் செய்து முடித்ததன் பின்பு உங்கள் மனதில் தோன்றிய எண்ணம் என்ன?

(10 புள்ளிகள் )

2)
   1. உமது பிரதேசத்தில் வளர்க்கப்படும் பண்ணை விலங்குகள் மூன்றினையும் அவை வளர்க்கப்படும் நோக்கத்தையும் குறிப்பிடுக.
   2. உள்ளக வளர்ப்பு முறையின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அட்டவணைப்படுத்தி தருக.
   3. பண்ணைக் கழிவுகளினால் சூழலில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் மூன்று தருக.
   4. பயிர்ச்செய்கை கோபுரத்தை அமைக்கும் முறையைப் படிமுறை ஒழுங்கில் தருக.

(10 புள்ளிகள்)

3)
   1. பழுதடைந்த உணவில் காணப்படும் மாற்றங்கள் நான்கு தருக.
   2. அறுவடைக்குப் பின்னரான இழப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
   3. வீட்டில் இலகுவாக யோக்கட் தயாரிக்கத் தேவையான பொருட்கள் எவை?
   4. வீட்டில் இலகுவாக யோகட் தயாரிக்கும் முறையை படிமுறை ஒழுங்கில் தருக.

(10 புள்ளிகள்)

4)
   1. வீட்டு உபகரணங்களின் பராமரிப்பின்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் நான்கு தருக.
   2. பின்வரும் இலத்திரனியல் துணைக்கூறுகளின் குறியீடுகளைத் தருக.
      A. கொள்ளளவி  B. ஆளி  C. ஒலிபெருக்கி  D. ஒளிகாலும் இருவாயி
   3. பின்வருவனவற்றின் பயன்பாட்டைச் சுருக்கமாகத் தருக.
      A. மின்பற்றாசுக்கோல்  B. வெட்டுக்குறடு  C. செயற்றிட்டப்பலகை  D. தட்டைமுனைக்குறடு
   4. மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை அதிக பயன்தரு தன்மை கொண்டதாகப் பயன்படுத்தத்தக்க உத்தியில் “ பல்நோக்கு” உத்தி கொண்ட பொருட்கள் மூன்று குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

5)
   1. இலக்கு சந்தையொன்றை துண்டமாக்கல் செய்யவேண்டிய முறையைத் தீர்மானிக்கும்போது உற்பத்தியாளர் ஒருவர் அறிந்துகொள்ள வேண்டிய சமூகக் காரணிகள் நான்கு தருக.
   2. விளம்பரத்தின் அடிப்படைக் கூறுகள் நான்கும் எவை?
   3. உற்பத்திக்கிரயத்தின் கூறுகள் எவை?
   4. விளம்பர ஊடகங்கள் நான்கினைத் தருக.

(10 புள்ளிகள்)